# நெகனூர்பட்டி

நெகனூர்பட்டி (Neganur Patti) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில், நெகனூர் ஊராட்சியில் நெகனூர்பட்டி எனும் கிராமத்தில் ஒரு ச.கி.மீ. பரப்பில் அமைந்த சமணப் பண்பாட்டுத் தொல்லியல் தலமாகும்.


நெகனூர் பட்டில் குன்றின் மீதுள்ள அடுக்குப் பாறையில் சமணப்படுக்கையும் 4 -ம் நூற்றாண்டை சேர்ந்த பிராமி தமிழ் கல்வெட்டும் பழங்கால வெண்கோட்டுரு ஓவியங்களும் உள்ளன

## அமைவிடம்

நெகனூர்பட்டி சமணப் பண்பாட்டுத் தலம் செஞ்சி நகரத்திற்கு வடகிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ளது.

## அமைப்பு

சிறுகுன்றுகள் சூழ்ந்த நெகனூர்பட்டியை அடுக்கங்கள் என்பர். இக்குன்றுகள் சிறுகுகைகள் கொண்டது. இக்குகைகளில் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய பாறை ஓவியங்கள், தமிழ்ப் பிராமி கல்வெட்டுகள் மற்றும் சமணர் படுகைகள் கொண்டுள்ளது.



## சமணர் படுக்கைகள்

இந்த குன்றின் அடிப்பகுதியில், இருபுறமும் இரண்டு குகைகள் அமைந்துள்ளன. இரண்டு குகைகளிலும் சமண துறவிகள் பயன்படுத்திய கல் படுக்கைகளின் தடயங்கள் உள்ளன. குகைகளில் ஒன்றின் அருகே ஒரு சிறிய குளம் காணப்படுகிறது.

## கல்வெட்டுகள்

குன்றின் அடிப்பகுதிக்கு சற்று மேலே, தமிழி சமண கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## ஓவியங்கள்

பெரிய பாறையின் கீழ் வரலாற்றுக்கு முந்தைய ஓவியங்கள் உள்ளன. இந்த ஓவியம், கைகளில் எதையாவது வைத்திருப்பது, விளையாடுவது போன்ற பல் வேறு செயல்களைக் கொண்ட மனிதர்களைக் கொண்டுள்ளது.

ஓவியங்கள் வெள்ளை காவியால் வரையப்பட்டுள்ளன. இது 5000 - 6000 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழி சமணக் கல்வெட்டுச் செய்தி

கிபி 4 ஆம் நூற்றாண்டின் அடுக்கங்கலில் உள்ள தமிழ்-பிராமி எழுத்துக்களை முதன்முதலில் தொல்பொருள் ஆய்வாளர் எஸ். ராஜவேலு 1992 இல் கண்டுபிடித்தார்.



1. பெரும்பொகழ்
2. செக்கந்தி தயிரு
3. சேக்கந்தண்ணிசெ
4. ய்வித்த பள்ளி

என்பது கல்வெட்டு வாசகமாகும். பெரும்பொகழ் என்ற ஊரைச் சேர்ந்த சேக்கந்தி என்பவரின் தாயான சேக்கந்தண்ணி என்பவர் இந்த பள்ளியைச் செய்வித்தார் என்பது இதன் பொருளாகும். முதல்வரி கடைசி எழுத்து "ழ்". க. இராசவேலுவால் "ய்" என்று படிக்கப்பட்டது. இரண்டாம் வரி கடைசி எழுத்து "ரு", எம்.டிசம்பத் அவர்களால் "உ" என்று படிக்கப்பட்டது.

கல்வெட்டில் சேக்கந்தண்ணி என்பதை சேக்கந் அண்ணி என்று பிரித்துப் படிக்க வேண்டும். இவரைச் சமணப் பெண் துறவியாகக் கொள்ளலாம். சேக்கிழார் என்பதில் "சே" குடிப் பெயராக இருப்பது போல இங்கும் குடிப்பெயர் எனக்கருதலாம். "சே" என்பது காளை என்ற பொருளில் அகப்பாடலில் (அகம்:36 "கயிறு இடு கதச் சேப்போல") குறிக்கப்படுகின்றது.

கந்தி என்ற சொல் சீவக சிந்தாமணியில் (26:49 கறந்த பால் அணைய கந்தி) பெண் துறவி என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. சூடாமணி கந்தி கௌந்தி என்ற சொற்களுக்கும் பெண்துறவி என்று பொருள் சொல்கிறது.

தாயிரு என்பது தற்கால கன்னட மொழியில் தாயாருக்கு வழக்கு சொல்லாக உள்ளது.
அண்ணி என்பது மரியாதைச் சொல்லாக பயன்பட்டுள்ளது. பெரும்புகை என்றொரு ஊர் அருகில் உள்ளது. அங்குள்ள குன்றிலும் கற்படுகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் சொல்லப்படும் பெரும்பொகழ் இன்றைய "பெரும்புகை" யாக இருக்கலாம்.

## பாறை ஓவியங்கள்

அடுக்கங்கள் குகையில் கி.மு 1000 கால பாறை ஓவியங்கள் வெள்ளை நிறத்தில் இருப்பதால், இந்த வண்ணப்பூச்சுகளை சுண்ணாம்பைப் பயன்படுத்தி உருவாக்கி இருக்கலாம். ஓவியங்களில் ஆண்கள் மட்டுமே காணப்படுகின்றனர். விலங்குகள் எதுவும் வரையப்படவில்லை. சில ஓவியங்கள் மிகவும் பலவீனமாகவும், புரிந்து கொள்ள முடியாததாகவும் உள்ளன.



**குறிப்பு:** *இந்த இடம் தமிழ் நாடு தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அப்பகுதியில் இருந்து 300 மீட்டர் சுற்றளவில் எந்தவித கல் உடைப்பும் செய்யக்கூடாது என்று அறிவித்திருந்த நிலையில் இதன் அருகே சில நாட்களுக்கு முன்பு பாறைகள் வெடிவைத்து தகர்க்கப்பட்டது. இதுபற்றி அறிந்த தொல்லியல் துறையினர் விரைந்து வந்து, வெடிவைக்கும் பணியை தடுத்து நிறுத்தினர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர் கள் மீது போலீசில் புகார் கொடுத்திருந்தனர். இந்நிலையில் மேற்படி நினைவுச் சின்னங்களை பாதுகாக்கும் வகையில் அப்பகுதியில் தொல்லியல் துறை சார்பில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணியை தமிழ்நாடு தொல்லியல் துறை முதன்மை செயலாளர் உதயச்சந்திரன், இணை இயக்குனர் சிவநாதன் ஆகியோர் உத்தரவின் பேரில் சுற்றுச்சுவர் அமைக்கப்படுவதை தொல்லியல் துறை உதவி பொறியாளர் ராஜேஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

# வேடல் பள்ளி (விடால்/வெடால்)

வேடல் பெண் பள்ளி (பொ.யு. 781) தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்துள்ள பழைய சமண குகைப்பள்ளி. இது பெண்களுக்கான கல்விநிலையமாக இருந்துள்ளது.

விடால் / வெடால் / வேடல் ஆண்டார் மடம் பாடல்புரத்தில் (தற்போதைய கடலூர்) அமைந்துள்ள ஒரு புகழ்பெற்ற சமணப்பள்ளியாகும். இங்கு தான் சமண முனிவர் சர்வநந்தி, லோகவிபாகம் என்ற நூலை அர்த்தமாகதியிலிருந்து வடமொழியில் மொழிபெயர்த்தார். இது கி.பி. 880இல் நடந்தது.



## அமைவிடம்

வந்தவாசியிலிருந்து ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தென்மேற்கில் தென்னார்க்காடு மாவட்டத்தின் வட எல்லையை ஒட்டியமைந்துள்ள சிற்றூர் வேடல் ஆகும். இவ்வூரை அடுத்துள்ள மலையில் இரண்டு குகைகள் உள்ளன, இவை பொ.யு. 8-ம் நூற்றாண்டில் சமணப் பள்ளியாய்த் திகழ்ந்திருக்கின்றன.



# பெண்பள்ளி

வேடல் சமணப் பள்ளியின் பெண் சமண ஆசிரியர், 500 மாணவர்களுக்குக் கல்வி அளித்துள்ளார். சமணப் பெண் ஆசிரியர் பட்டினிக் குரத்தி, விளாப்பாக்கத்தில் பள்ளி ஒன்றை நிறுவியுள்ளார். இவற்றால் சமணப் பள்ளிகளில்,பெண்கள் ஆசிரியர்களாக இருந்துள்ளமை வெளிப்படுகிறது. அத்துடன்,பெண்களுக்கு எனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப்பள்ளிகள் இருந்தமையும் புலப்படுகிறது.

இதனைச் சோழ மன்னனாகிய முதலாவது ஆதித்தனது ஆட்சியின் போது (பொ.யு. 885) பொறிக்கப்பட்டுள்ள சாசனம் தெரிவிக்கிறது. இந்த பெண் பள்ளி இங்குள்ள குகைப்பாழிகளன்றித் தனியாகக் கட்டப்பட்ட பள்ளிகளல்ல.

இந்த பள்ளியின் அமைப்பு, நிர்வாகம், செயல்பட்ட விதம் போன்றவை பற்றிய செய்திகள் எவையும் தெரியவில்லை.

மாறாக பொ.யு. 885-ம் ஆண்டில் இங்கிருந்த கனக வீரகுரத்தியாரும், அவரைப் பின்பற்றியொழுகிய 500 மாணாக்கியருக்கும், மற்றொரு பிரிவினராகிய 400 பெண் துறவியருக்கும் ஏதோ ஒரு காரணத்தால் பிணக்கு ஏற்பட, அச்சமயத்தில் மாதேவி ஆரந்தி மங்கலமாகிய விடாலைச் சார்ந்த மக்கள் கனக வீரகுரத்தியையும், அவரது மாணாக்கியரையும் பாதுகாத்து உணவளிக்க வழிவகை செய்திருக்கின்றனர்.

இந்த கனகவீரகுரத்தி குணகீர்த்தி பட்டாரர் என்னும் துறவியரின் மாணவி எனவும் அறிய வருகிறது.

வேடலிலுள்ள பெண் பள்ளியில் பெண் துறவியரிடையே என்ன காரணத்தினால் பிணக்கு ஏற்பட்டதென்றும், அது எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டதென்றும் அறிவதற்கில்லை.

இங்கு பெண் துறவியருக்கென பொ.யு. 8-ம் நூற்றாண்டிலேயே பள்ளி இருந்தது உறுதியாகிறது. இப்பள்ளியின் நிர்வாகத்தினை மிக்கவாறும் கனகவீரகுரத்தியார் கண்காணித்து வந்திருக்க வேண்டும். இதனுடன் 400 பெண் துறவியரும், 500 மாணாக்கியரும் தொடர்புடையவராகத் திகழ்ந்திருப்பதை நோக்கும் போது, இது மிகப்பெரிய சமயக்கல்வி அமைப்பாகத் திகழ்ந்திருக்க வேண்டும் ஆனால் இந்த பெரும் பள்ளியின் முழுமையான வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

கனகவீரகுரத்தியாரின் குருவாகிய குணகீர்த்தி வேடல் ஊரைச் சார்ந்தவர் என்பதனைத் தவிர அவரைப் பற்றி செய்திகள் இல்லை.

பண்டைக் காலத்தில் இத்தலத்திற்கு விடால் என்றும் மாதேவி ஆரந்தி மங்கலம் என்றும் இரு பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரே சமயத்திலேயே இவ்விரு பெயர்களும் சற்று பிற்காலம் வரை இருந்தமையை இங்குள்ள வேறொரு சாசனமும் குறிப்பிடுகிறது.

தொண்டை மண்டலத்தில் வேடலிலும், விளாப்பாக்கத்திலும் பெண் பள்ளிகள் இருந்திருக்கின்றன. திருப்பான் மலையின் ஒரு பகுதியாகிய விளாப்பாக்கத்தில் அரிஷ்டநேமி பட்டாரரின் மாணாக்கியாகிய பட்டினிக்குரத்திகள் கிணறு ஒன்று வெட்ட ஏற்பாடு செய்து அதனையும், அதனுடன் கூடிய நிலத்தினையும் பெண் பள்ளிக்கு வழங்கியிருக்கிறார்.

இந்த பள்ளியைப் பற்றிய விரிவான செய்திகளும் நமக்குத் தெரியாமற் போய்விட்டது. இவ்விருபள்ளிகள் மட்டுமின்றி விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த பள்ளிமடம் என்னும் ஊரிலும் "கன்னிமாரின் காட்டாம் பள்ளி" ஒன்று இருந்ததாகத் தெரிய வருகிறது. இப்பள்ளியின் அமைப்பினையும், நிர்வாகத்தினையும் பற்றிய எந்த விதமான தகவல்களும் இல்லை. எவ்வாறாயினும் தமிழ் நாடு த்தில் பெண் துறவியருக்கென வேடல், விளாப்பாக்கம், பள்ளி மடம் ஆகிய மூன்று இடங்களில் பள்ளிகள் இருந்தமை அறியற்பாலதாகும். ஆர்யாங்கனைகள் எனவும் குரத்தியர் எனவும் அழைக்கப்பட்டு வந்த பெண் துறவியரும் அருகன் அருள் நெறிபோற்றியும், சமயக் கருத்துகளைப் போதித்தும் பெருந்தொண்டாற்றியிருக்கின்றனர் என்பதனை இச் செய்திகள் காட்டுகின்றன

# குகைகள்

இங்குள்ள குகைகளில் கற்படுக்கைகளோ அல்லது சமண சமயச் சிற்பங்களோ உருவாக்கப்படவில்லை.

இக்குகைகளுக்கு அருகில் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட இரண்டு மண்டபங்களும் காணப்படுகின்றன இவற்றை 'ஆண்டார் மடம்' என அழைப்பது வழக்கமாகும்.



# கல்வெட்டுக்கள்

குகைக்கு எதிர்புறத்திலுள்ள பாறையொன்றில் பல்லவ, சோழ மன்னர்களது சாசனங்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். காலச்சுழலில் இவற்றின் பெரும்பகுதி அழிந்துள்ளமையால் இத்தலத்தின் முழுமையான வரலாற்றினை அறியமுடியாமற் போய்விடுகிறது.

இரண்டாம் நந்திவர்ம பல்லவனது ஆட்சியின் போது (பொ.யு. 781) இங்குள்ள குகைப்பாழி விடால் பள்ளி என அழைக்கப்பட்டிருக்கிறது. இத்தலத்தின் அப்போதைய பெயராகிய விடால் என்பது தான் காலப்போக்கில் வேடல் என மாற்றம் பெற்றிருக்கிறது.

**"ஸ்வஸ்திஶ்ரீ கோவிராச கேசரிபர்மர்க்கு யாண்டு பதினாலாவது சிங்கபுர நாட்டுக் கீழ்வழி விடால் மாதேவி ஆரந்திமங்கல முடைய குணகீர்த்தி படாரர் வழி மாணாக்கியார் கனகவீரக்குரத்தியாரையும் மவர்வழி மாணாக்கியாரையும்**

**தாபாஸிகள் நானூற்றுவர்க்கும் கொள்ளாதமையில் இக்கோயிற் பிள்ளைகள் ஐந்நூற்றுவர்க்கு வழிஇலாரும் காத்தூட்டு வோமானோம் எங்களுடைய ஸ்வரஷை.**

**இது இரஷிப் பார் அடிநிலை, எங்கள் தலைமேலென மாதேவி ஆரந்தி மங்கலமுடைய கனகவீரக் குறத்தியார்த் தங்க..ர் மகளா தனமையில்... முக்கியருமிது காப்பார் அவர்கள் ஸ்வரஷை**

**இதனை இரஷிப்பாரடி நிலை என் தலை மேலென...டறுங் காழாறும் முதலாகிய மாதேவி ஆராந்தி மங்கலமுடைய கனகவீரக் குரத்தியார் தங்கள் மகளாராதினமையில்**

**இது வெல்லாந் தங்கள் காவில் இதனை தீங்கு நினைத்தாற் கங்கையிடைக் குமரியிடை எழுநூற்றுக் காதமும் செய்த பாவங் கொள்வார். காவலனுக்கு பிழைத்தாராவார்**" என்பது இக்கல்வெட்டு

1908-ம் ஆண்டு இந்திய கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளது. "கனகவீரக் குறத்தி வழி வந்த ஐநூறு பேருக்கும், இப்பள்ளியுடன் தொடர்பு கொண்ட நானூறு பெண் துறவியருக்கும் இந்தப் பள்ளி போதிய இடவசதி உடையதாக இல்லாமலும், அவர்களுக்கு உணவளிக்கிற நிலையில் இல்லாமலும் இருந்ததால், விடால் ஊர்மக்கள் அவர்களுக்கு உணவளித்துக் காப்பதற்கு முன்வந்தனர் என்பது தெளிவாகிறது.